**சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்**
**முன்னிலை: திருமதி.N.ஷர்மிளா, B.A.,B.L.,**
**சார்பு நீதிபதி, சத்தியமங்கலம்**

2024-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 06-ம் நாள் சனிக்கிழமை
(2054 திருவள்ளுவராண்டு சோபகிருது வருடம் பங்குனித்திங்கள் 24-ம் நாள்)

**I.A.No.3/2023**
**in**
**O.S.No.339/2023**

1. K.K. திருநாவுக்கரசு
2. S. தனலெட்சுமி ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. R. ராமராஜ்
2. M. சென்னிமலை
3. K.A. காமராஜ் ... எதிர்மனுதாரர்கள்/1 முதல் 3 பிரதிவாதிகள்

இம்மனுவானது 20.12.2023 தேதியன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் வழக்குரைஞர் திரு.B. நாகக்குமார், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டு தோன்றா தரப்பினராக கருதப்பட்டும், மனுதாரர்கள் தரப்பில் வாதம் கேட்கப்பட்டு, வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இதுநாள் வரையில் இந்த நீதிமன்ற ஆய்விலிருந்து வந்த இம்மனுவில், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

## உத்தரவு

இந்த மனுவானது, மனு சொத்தை பொறுத்து மனுதாரர்கள் அமைதியான முறையில் சுவாதீனத்தில் இருந்து வருவதை 1 முதல் 3 பிரதிவாதிகளோ அவரது ஆட்களோ மற்றும் முகவர்களோ எந்தவித இடையூறும் செய்யக்கூடாது என அவர்கள் பெயரில் இந்த தாவா முடியும் வரை ஒரு தற்காலிக உறுத்துக்கட்டளை உத்தரவும், கோரும் பரிகாரம் மிகவும்

அவசரமாக இருப்பதால் இந்த மனு முடியும் வரை ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவாக வேண்டி ஆர்டர் 39 ரூல் 1, 2 மற்றும் 151 CPC-ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுவின் சுருக்கம்</u>:-

மனுதாரர்கள் இருவரும் கணவன் மனைவி ஆவார்கள். முதல் மனுதாரர் சத்தியமங்கலம் வட்டம், சிக்கரசம்பாளையத்தில் ரீ.சர்வே எண்கள் 705/1, 705/3, 705/4, 705/7, 706/2, 706/3, 706/4, 706/5, 709/3, 709/4, 709/6 மற்றும் 709/7 ஆகிய காலைகளில் உள்ள 9.99 பு.ஏக்கர் பூமிகளை 06.04.2022 தேதியிட்ட கிரய ஆவணத்தின் (ஆவண எண்.2520/2022) மூலம் கிரயம் பெற்று அனுபவித்து வருகின்றார். அதே போன்று 2-ம் மனுதாரர் சிக்கரசம்பாளையத்தில் ரீ.சர்வே எண்கள் 709/1, 708/2, 708/5, 704/3, 704/4, 707/4 மற்றும் 707/6 ஆகிய காலைகளில் உள்ள 6.56 பு.ஏக்கர் பூமிகளை 06.04.2022 தேதியிட்ட கிரய ஆவணத்தின் (ஆவண எண்.2995/2022) மூலம் கிரயம் பெற்று அனுபவித்து வருகின்றார். மேற்படி கிரய ஆவணங்களின் சான்றிட்ட நகல்கள் பிராதுடன் தாக்கல் செய்யப்படுகிறது. மனுதாரர்கள் இருவரும் கிரயம் பெற்ற மேற்படி காலைகளின் இடை இடையே ரீ.சர்வே எண்கள்.705/5, 705/6, 706/1, 706/6, 708/4, 709/2 மற்றும் 709/5 ஆகிய காலைகளில் உள்ள பூமிகள் அனாதீனம் பூமிகளாக அமைந்துள்ளன. மேற்படி காலைகளில் அமைந்துள்ள அனாதீனம் பூமிகளை மனுதாரர்கள் கிரயங்கள் பெற்ற பூமிகளின் முன்னாள் கிரயதாரர்களும் பாத்தியதாரர்களுமான M.ராமசாமி அவர்களின் குமாரர் R.கதிர்வேல், K.P.ராமசாமி அவர்களின் குமாரர்கள் R.கணேஷ் மற்றும் ஒரு K.K.குருசாமி ஆகியவரின் குமாரர் G.லோகநாதன் ஆகியவர்கள் மேற்படி சொத்துக்களை கிரயங்கள் பெற்று சுவாதீனம் அடையும் போது, அந்த கிரய பட்டா பூமிகளுடன் சேர்த்து மேற்படி ரீ.சர்வே எண்கள். 705/5, 705/6, 706/1, 706/6, 708/4, 709/2 மற்றும் 709/5 ஆகிய காலைகளில் உள்ள அனாதீன பூமிகளையும், பழைய க.ச.நெ.1/3-ல் காலைகளில் உள்ள அனாதீனம் பூமிகளையும் அடைந்து அனுபவித்து

வந்துள்ளனர். மேலும், மேற்படி காலைகளில் அமைந்திருந்து அனாதீன பூமிகளை அடைப்பு செய்து ஆக்ரமித்து செய்து மாமரங்கள் உட்பட பல மரங்கள் பயிரிட்டு விவசாயம் செய்தும், குறிப்பாக பழைய க.ச.நெ.1/3ல் உள்ள காலைகளில் அடைப்பு செய்து, தண்ணீர் குழாய்கள் பதித்தும் ஆக்ரமிப்பு செய்து விவசாயம் செய்து அனுபவித்து வந்துள்ளனர். அவ்வாறு மனுதாரர்கள் அனுபவித்து வரும் மேற்சொன்ன அனாதீனம் ரீ.சர்வே எண்கள்.705/5, 705/6, 706/1, 706/6, 708/4, 709/2 மற்றும் 709/5 ஆகிய காலைகளில் உள்ள பூமிகள் தான் இந்த வழக்கின் தாவா 1 முதல் 4 அயிட்ட சொத்துக்கள் ஆகும். இவ்வாறு மனுதாரர்கள் கிரயம் பெற்றுள்ள சொத்துகளின் முன்னாள் பாத்தியதாரர்களான மேற்படி R.கதிர்வேல், R.கணேஷ் மற்றும் G.லோகநாதன் ஆகியவர்கள் கிரயம் பெற்றுள்ள பட்டா நிலங்களுக்கும், அதனோடு சேர்ந்து அனுபவித்து வந்துள்ள தாவா அனாதீன பூமிகளுக்கும் மேற்படியார்களின் பெயரில் சத்தியமங்கலம் தலைமையிடத்து துணை வட்டாட்சியர் 14.07.2000 தேதியிட்டு வழங்கியுள்ள 1409 நெ.பசலிக்கான கிராமக்கணக்கு சாகுபடி அடங்கல் நகல்கள் இத்துடன் தாக்கல் செய்யப்படுகிறது. மேலும் மேற்படியார்கள் மேற்படி பட்டா மற்றும் தாவா அனாதீனம் பூமிகளையும் சேர்ந்து அனுபவித்து வந்து, அதில் காலம் காலமாக விவசாயம் செய்து வந்து, அதற்கு கடந்த 1996-ம் வருடம் முதல் அரசுக்கு உரிய சொத்து வரி வகையறாக்களை செலுத்தி வந்துள்ளனர். அதற்கான கந்தாய ரசீதுகளின் அசல்கள் இத்துடன் தாக்கல் செய்யப்படுகிறது. மேலும், தாவா முதல் அயிட்ட சொத்தான அனாதீனம் ரீசர்வே நெ.705/5 மற்றும் 705/6-ல் ஆகிய காலைகளின் நடுவே மேற்படி லோகநாதன் அவர்கள் பண்ணை வீடு கட்டியும், மோட்டார் ரூம் அமைத்து மின் இணைப்பு பெற்று (மின் இணைப்பு எண்.04-363-003-561) அதற்காக கடந்த 2004-ம் ஆண்டு முதல் மின் கட்டணங்களை செலுத்தி வந்தும், கடந்த 2005-ம் ஆண்டு முதல் வீட்டு வரிகள் கட்டி வந்து மேற்படி தாவா அனாதீன பூமிகளில் விவசாயம் செய்து அனுபவம் செய்து வந்துள்ளார். அதற்கான வீட்டு வரி ரசீதுகள் மற்றும் மின் கட்டண ரசீதுகள் இத்துடன்

தாக்கல் செய்யப்படுகிறது. அவ்வாறு மேற்படி R.கதிர்வேல், R.கணேஷ் மற்றும் G.லோகநாதன் ஆகிய மூவரும் அடைந்து அனுபவித்து வந்த பட்டா மற்றும் தாவா அனாதீனம் பூமிகள் அனைத்தையும் ஒரு யு.ஜெயமணி என்பவருக்கு 06.04.2005-ம் தேதியிட்ட ஆவண எண்கள் 992/2005 மற்றும் 993/2005 ஆகிய கிரய ஆவணங்கள் மூலம் பட்டா நிலங்களையும் அதனோடு சேர்ந்த மேற்படி தாவா அனாதீனம் நிலங்களையும் ஒப்புவித்து மேற்படி யு.ஜெயமணி என்பவர் மேற்படி பட்டா பூமிகளோடு சேர்த்து தாவா அனாதீனம் பூமிகளையும் அடைந்து தொடர்ந்து அனுபவித்து வந்துள்ளார். அதற்கான அவரது பெயரில் ஏற்பட்டுள்ள கந்தாய ரசீதுகளை இத்துடன் தாக்கல் செய்யப்படுகிறது. பின்னிட்டு, மேற்படி பட்டா மற்றும் தாவா அனாதீனம் பூமிகளை நாங்கள் கிரயம் பெற்றவர்களான K.M.சிவதாசம் மனைவி மல்லிகா மற்றும் T.P.பவுல்தாசன் மனைவி மோலி ஆகியவர்கள் மேற்படி U.ஜெயமணியிடமிருந்து 13.02.2007 தேதியிட்ட ஆவண எண்கள் 768/2007, 769/2009, 770/2007 மற்றும் 771/2007 ஆகிய கிரய ஆவணங்களின் மூலம் பட்டா பூமிகளையும் அதனோடு சேர்த்து தாவா அனாதீனம் பூமிகளையும் அடைந்து அனுபவித்து வந்துள்ளனர். மேற்படி கிரய ஆவணங்களின் நகல்கள் இத்துடன் தாக்கல் செய்யப்படுகிறது. மேற்படி மல்லிகா அவர்கள் பெயரில் அனாதீனம் காலையில் அமைந்துள்ள வீட்டிற்கு, வீட்டு வரி பெயர் மாற்றம் ஏற்பட்டு பூமிகளை அனுபவம் செய்து வந்துள்ளனர். அதற்கான வீட்டு வரி ரசீதுகள் இத்துடன் தாக்கல் செய்யப்படுகிறது. இவ்வாறு மல்லிகா மற்றும் மோலி ஆகியவர்கள் கிரயங்கள் மூலம் அடைந்த பட்டர் சொத்துக்களை மனுதாரர்கள் இருவருக்கும் தனித்தனியாக 22.04.2022 தேதியிட்ட கிரய ஆவணங்கள் மூலம் எழுதிக்கொடுத்து மேற்படி பட்டா பூமிகளையும் அதனோடு சேர்ந்து அனுபவித்து வந்த தாவா அனாதீனம் ரீ.சர்வே எண்கள் 705/5, 705/6, 706/1, 706/6, 708/4, 709/2 மற்றும் 709/5 ஆகிய காலைகளில் உள்ள அனாதீன பூமிகளையும் ஒப்படைத்து மனுதாரர்கள் இருவரும் கணவர் மனைவி என்ற முறையில் ஒன்றாக மேற்படி கிரய சொத்துக்களையும் தாவா அனாதீன

பூமிகளையும் சேர்ந்து அடைந்து ஒன்றாக அனுபவித்து வருகின்றார்கள். மேலும், மேற்படி பட்டா பூமிகளுக்கு மனுதாரர்கள் பெயரில் பட்டா மாறுதல் செய்து அவர்கள் பெயரில் சொத்து வரிகள் செலுத்தி வந்து அந்த பட்டா பூமிகளோடு சேர்த்து தாவா அனாதீனம் பூமிகளையும் அனுபவம் செய்து வருகின்றார்கள். மேற்படி அனாதீனம் பூமிகள் மனுதாரர்கள் கிரயம் பெற்ற கிரய பட்டா பூமிகளோடு இடையிடையே இணைந்துள்ளதால் அவற்றில் மற்றவர்கள் வந்து செல்ல தனித்து தடம் ஏதும் இல்லை. இவ்வாறு, தாவா சொத்துக்களை எங்களுக்கு கிரயம் கொடுத்தவர்களும் அவர்களுக்கு கிரயங்கள் கொடுத்தவர்களும் மற்றும் முன் கிரயதாரர்களும் எல்லாம் தாவா சொத்துக்களை அடைந்து அனுபவித்து வந்து, அதில் வீடு கட்டி மின் இணைப்புகள் பெற்று, அதற்குரிய வரி வகையறாக்கள் கட்டி வந்து பல முன்னேற்றங்கள் செய்து அனுபவித்து வந்துள்ளனர். மனுதாரர்கள் கிரயம் செய்த பின்னிட்டு, பட்டா பூமிகளோடு அவர்கள் அடைந்து அனுபவம் செய்து வரும் தாவா முதல் அயிட்ட சொத்துக்களான அனாதீன பூமியான ரீ.சர்வே 705/1 மற்றும் 705/6 ஆகிய பூமிகளில் அமைந்துள்ள வீடு வகையறாவுக்கு வீட்டு வரி மற்றும் மின் இணைப்புகள் மனுதாரர்கள் பெயரில் பெயர் மாறுதல் செய்ய மனு கொடுத்ததன் பேரில், அரசு வருவாய்துறையினர் அதற்கான தணிக்கை செய்யப்பட்டு மனுதாரர்கள் தாவா சொத்துக்களை அனுபவித்து வருவதை உறுதி செய்து முன் உரிமையாளர்களின் ஒப்புதலுடன் எங்களது பெயரில் வீட்டு வரி மற்றும் மின் வரி மாற்றம் செய்து வழங்கப்பட்டுள்ளது. மனுதாரர்கள் அதற்குரிய வீட்டு வரி வகையறாக்கள் மற்றும் மின் கட்டணங்கள் செலுத்தி வந்து மேற்படி அனாதீன பூமிகளில் வேளாண்மை செய்து அனுபவித்து வருகின்றனர். இவ்வாறு மேற்படி அனாதீனம் காலைகளான தாவா 2 மற்றும் 3 அயிட்ட சொத்துக்களான ரீ.சர்வே நெ.706/1, 706/6 மற்றும் 709/2 ஆகிய காலைகளில் முன் பாத்தியதாரர்களால் மாமரங்கள் பயிரிடப்பட்டு வந்து தண்ணீர் இல்லாமல் காய்ந்து விட்ட நிலையில், மனுதாரர்கள் அவற்றை அகற்றி விட்டு, உழவு செய்து தற்போது சொட்டுநீர் பாசன வசதி ஏற்படுத்தி வருகின்றார்கள். மேலும், தாவா 4-ம் அயிட்ட

சொத்தான அனாதீனம் ரீ.சர்வே 708/4 காலையில் 5 வருட பருவ தேக்குமரங்கள் பயிரிடப்பட்டு மனுதாரர்கள் அதனை பராமரித்து வருகின்றனர். அதே போல் தாவா 3-ம் அயிட்ட சொத்தான ரீ.சர்வே நெ.709/5-ல் வேளாண்மைக்கு தேவையான நீரை சேமிப்பதற்கான நீர் தேக்க தொட்டி அமைத்துள்ளார்கள். இவ்வாறு மனுதாரர்கள் கிரயம் பெற்ற சொத்துக்களோடு சேர்ந்து அடைந்து அனுபவம் செய்து வரும் மேற்படி தாவா அனாதீனம் பூமிகளில் மனுதாரர்கள் பல மேம்பாடுகளை செய்து அரசுக்கு செலுத்த வேண்டிய வீட்டு வரி மற்றும் மின் கட்டணங்களை செலுத்தி தொடர்ந்து பட்டா பூமிகளோடு தாவா அனாதீன பூமிகளையும் சேர்த்து அனுபவம் செய்து வருகின்றார்கள். அவ்வாறு மனுதாரர்கள் அனுபவித்து வரும் மேற்படி தாவா அனாதீனம் சொத்துக்களில் மனுதாரர்களைத் தவிர வேறு யாருக்கும் எந்தவகையான அனுபவபாத்தியமும் இல்லை. தாவா முதல் அயிட்ட அனாதீன சொத்திலுள்ள வாதிகள் அனுபவித்து வரும் வீடு வகையறாவுக்கான மனுதாரர்களது பெயரில் செலுத்தி வந்துள்ள வீட்டு வரி மற்றும் மின் கட்டண ரசீதுகள் இத்துடன் தாக்கல் செய்யப்படுகிறது. மேலும் மனுதாரர்கள் கிரயத்திற்கு பின்னிட்டு, தாவா அனாதீன சொத்துக்களில் உள்ள அனுபவ பாத்தியம் மற்றும் தங்களுக்கு முன்பு தங்களுக்கு கிரயங்கள் செய்து கொடுத்தவர்கள் எல்லாம் கடந்த 1996-ம் ஆண்டு முதல் கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக அனுபவித்து வந்ததின் அடிப்படையில் தாவா அனாதீன பூமி சொத்துக்களை மனுதாரர்களது பெயரில் பட்டா வழங்கக்கோரி, ஈரோடு மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கை மனு செய்ததன் பேரிலும், தாவா சொத்துக்களுக்குரிய மதிப்பை அரசிற்கு செலுத்த தயாராக உள்ளதாக கூறிய மனுதாரர்களின் கோரிக்கை முறையாக இருந்ததால், அதன்படி அரசு நடவடிக்கை எடுத்து, தாவா சொத்துக்களுக்குரிய நில மதிப்பீட்டை நிர்ணயித்து அதை மனுதாரர்கள் அரசிற்கு செலுத்திய பின் மனுதாரர்களுக்கு மனுதாரர்கள் கோரியபடி தாவா சொத்துக்களை ஒப்படைப்பு செய்யலாம் என அரசு தரப்பில் பரிந்துரைக்கப்பட்டது. இப்படியாக அரசிற்கு வருவாய் ஈட்டும் பொருட்டு வாதிகள் முறையாக அணுகியதால், மேற்படி வீதம் அரசு அதிகாரிகளும்

மனுதாரர்ககளின் கோரிக்கையின் பேரில் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். அதற்கான அறிக்கைகளின் கோப்பின் நகல்களை இத்துடன் தாக்கல் செய்யப்படுகிறது. எதிர்மனுதாரர்கள்/1 முதல் 3 பிரதிவாதிகள் கோபி மற்றும் சத்தி பகுதியைச் சேர்ந்த அரசியல் செல்வாக்கும் ஆள்பலமும் உள்ளவர்கள் ஆவர். அவர்கள் ரியல் எஸ்டேட் தொழில் செய்து தாவா சொத்துக்களை சுற்றியுள்ள பல பகுதிகளில் நிலங்களை வாங்கி மனைநிலங்களாக பிரித்து விற்பனை செய்து வருகின்றனர். இப்படியிருக்க மனுதாரர்கள் மேற்படி வீதம் சொத்துக்களை கிரயம் செய்வதற்கு முன்பு எதிர்மனுதாரர்கள் கடந்த மார்ச் மாதம், 2022 கால வாக்கில் மனுதாரர்களுக்கு கிரயம் கொடுத்தவர்களான மல்லிகா மற்றும் மோலி ஆகியவர்களிடமிருந்து மனுதாரர்கள் கிரயம் செய்ய உள்ள பட்டா பூமிகளை, தாங்கள் கிரயம் பெற்று விட்டால், அந்த பட்டா பூமிகளோடு இடையில் அமைந்து அவர்கள் அனுபவத்தில் இருந்து வரும் அனாதீன பூமிகளான தாவா சொத்துக்களையும் அடைந்து விடலாம் எனற கெட்ட எண்ணத்தில் மனுதாரர்கள் கிரயம் பெறும் சொத்துக்களை கிரயம் பெற முயற்சி செய்து வந்ததில், மனுதாரர்கள் முறையாக விலை பேசி பட்டா பூமிகளை 06.04.2022-ல் கிரயங்கள் பெற்று விட்டதால், எதிர்மனுதாரர்கள்/1 முதல் 3 பிரதிவாதிகள் மனுதாரர்களோடு விரோதம் கொண்டு செயல்பட்டு, மனுதாரர்கள் அனுபவித்து வரும் அனாதீனம் தாவா பூமிகளை அரசிடமிருந்து முறையாக பட்டா பெற்று ஒப்படைப்பு பெற நடவடிக்கை எடுத்து வருவதை அறிந்து, அவர்களின் அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி அரசு அதிகாரிகளின் அந்த நடவடிக்கையை முறியடிக்கும் நோக்கத்தில் எதிர்மனுதாரர்கள் அவர்களது செல்வாக்கை பயன்படுத்தி மனுதாரர்களின் பட்டா கோரிக்கை மனுவின் நடவடிக்கையை காலம் தாழ்த்தி வந்ததால், மனுதாரர்களின் கோரிக்கையை காலம் தாழ்த்தாமல் பரிசீலனை செய்து மனுதாரர்கள் அனுபவம் செய்து வரும் தாவா அனாதீன சொத்துக்களின் பேரில் பட்டா வழங்க உத்தரவிடக்கோரி மனுதாரர்கள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு **W.P.No**.32372 மற்றும் 32375 **of** 2022 என்ற மனுக்கள் தாக்கல் செய்ததன்பேரில், மேற்படி நீதிமன்றம்

மனுதாரர்களின் மனுக்களின் பேரில் விசாரணை செய்து, மனுதாரர்களின் கோரிக்கை மனுக்களை தாவா 4 மற்றும் 6 பிரதிவாதிகள் மனுதாரர்களின் கோரிக்கை முறையாக உள்ளதா என பரிசீலனை செய்து உத்தரவு பிறப்பிக்க உத்தரவிட்டு மேற்படி ரிட் மனுக்களில் கடந்த 01.12.2022-ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளது. அந்த உத்தரவின் நகல் இத்துடன் தாக்கல் செய்யப்படுகிறது. மேலும், 4 முதல் 6 பிரதிவாதிகள் அனாதீனம் தாவா சொத்துக்களை மனுதாரர்கள் அனுபவித்து வருவதையோ மனுதாரர்களுக்கு விற்பனை செய்தவர்களும் அவர்களின் முன் பாத்தியதாரர்களும் கடந்த 1996-ம் ஆண்டு முதல் நீண்ட காலம் அனுபவம் செய்து வந்துள்ளது சம்பந்தமாக எந்தவித ஆட்சேபனையோ பிரச்சனையோ செய்யவில்லை. மேலும், அனாதீனம் தாவா சொத்துக்கள் சம்பந்தமாக அதனை அனுபவம் செய்து வந்த முன் பாத்தியதாரர்களான மேற்படி R.கதிர்வேல் அவர்களின் தகப்பனார் K.M.ராமசாமி, R.கணேஷ் அவர்களின் சகோதரர் ராமமுனியப்பன் மற்றும் G.லோகநாதனின் தகப்பனார் K.K.குருசாமி ஆகியோர்கள் சத்தியமங்கலம் மாவட்ட முனிசீப் கோர்ட்டில் முறையே 336//1998, 337/1998 மற்றும் 338/1998 ஆகிய சிவில் வழக்குகளை அவர்களின் அனுபவத்திற்கு இடையூறு செய்வதற்காக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்து மேற்படி வழக்குகள் 23.10.2000 அன்று அனுமதிக்கப்பட்டு நிரந்தர உறுத்துக்கட்டளை உத்தரவு பெற்றுள்ளனர். மனுதாரர்களின் முன் பாத்தியதாரர்கள் தாக்கல் செய்துள்ள மேற்படி வழக்குகளில் தாவா சொத்துக்களை அவர்கள் ஆக்கிரமிப்பு செய்து அனுபவம் செய்து வருவதை உறுதி செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தாவா அனாதீன பூமிகளை வாதிகளின் முன் பாத்தியதாரர்களும் கிரயதாரர்களும் கடந்த 1996 ஆண்டு முதல் அவர்களது பட்டா பூமிகளோடு சேர்த்து சொந்த பூமிகளாக பாவித்து அனுபவித்து வந்து, அதில் பல முன்னேற்றங்களை செய்தும், தாவா அனாதீன பூமிகளில் வீடு வகையறாக்கள் கட்டியும் மின் இணைப்புகள் பெற்று பயிர்கள் விவசாயம் செய்து அரசிற்கு தீர்வை வரி வகையறாக்களும் மின் கட்டணங்களும் செலுத்தி வந்து நீண்ட கால

அனுபவம் செய்து வந்துள்ளனர். இப்படியாக உண்மை நிலவரம் இருக்க, எதிர்மனுதாரர்கள்/1 முதல் 3 பிரதிவாதிகள் மனுதாரர்கள் அனுபவித்து வரும் அனாதீனம் தாவா சொத்துக்களை அவர்கள் அடைந்துவிட வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் கடந்த 14.07.2022 அன்று அவரது அடியாட்களுடன் தாவா சொத்திற்குள் வந்து அடியாட்களை வைத்துக்கொண்டு, மனுதாரர்கள் உடனே தாவா சொத்திலிருந்து காலி செய்ய வேண்டும் என்றும் இல்லையெனில் இரவோடு இரவாக தாவா சொத்துக்களை ஆக்கிரமிப்பு செய்து சாலைகள் அமைத்து கட்டிடங்கள் கட்டி விடுவோம் என மிரட்டி எதிர்மனுதாரர்கள் பிரச்சனை செய்தனர். அப்போது அக்கம் பக்கத்தார்கள் மனுதாரர்களுக்கு ஆதரவாக அங்கு வரவே, 1 முதல் 3 பிரதிவாதிகள் அங்கிருந்து சென்று விட்டனர். தாவா சொத்துக்களின் மீதான மனுதாரர்களின் அனுபவத்தை தடுப்பதற்கு எதிர்மனுதாரர்கள்/1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எந்தவித உரிமையும் இல்லை. எதிர்மனுதாரர்கள்/1 முதல் 3 பிரதிவாதிகளின் மேற்படி செயல் முற்றிலும் சட்டவிரோத செயலாகும். எதிர்மனுதாரர்கள்/1 முதல் 3 பிரதிவாதிகள் மிகுந்த பண பலமும் அரசியல் செல்வாக்கும் உள்ளவர்கள் என்பதாலும், அவர்கள் மனுதாரர்களை தாவா சொத்துக்களிலிருந்து வெளியேற்ற தொடர்ந்து செயல்பட்டு வரவே, மனுதாரர்கள் தாவா பூமிகளை முறையாக அமைதியாக அனுபவித்து வருவதற்கு பாதுகாப்பு செய்து கொள்ள வேண்டி வேறு வழியின்றி மனுதாரர்கள் இந்த தாவாவை சமூகம் நீதிமன்றத்தில் எதிர்மனுதாரர்கள்/1 முதல் 3 பிரதிவாதிகளும் அவரது ஆட்களும் தாவா சொத்தில் மனுதாரர்கள் அமைதியான முறையில் சுவாதீனத்தில் இருந்து வருவதற்கு எந்தவித இடையூறும் செய்யக்கூடாது என்று அவர்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பிறப்பிக்க வேண்டி இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளார்கள். எதிர்மனுதாரர்கள்/1 முதல் 3 பிரதிவாதிகளின் மேற்படி சட்டவிரோத செயலை நிரந்தர உறுத்துக்கட்டளை வழங்கி தடுக்க தவறும் பட்சத்தில் மனுதாரர்கள் மிகுந்த கஷ்ட நஷ்டத்திற்கும் ஈடு செய்ய இயலாத இழப்பிற்கும் உள்ளாவார்கள். மேலும், எதிர்மனுதாரர்கள்/1 முதல் 3 பிரதிவாதிகள் தாவா சொத்துக்களை

மனுதாரர்களிடமிருந்து அபகரித்து விட வேண்டும் என்ற நோக்கத்தோடு துரிதமாக முயற்சித்து வருகின்றனர். அவ்விதம் செய்ய எதிர்மனுதாரர்களுக்கு எந்தவித உரிமையும் இல்லை. எதிர்மனுதாரர்கள் பண பலமும், ஆள்பலமும் அரசியலில் செல்வாக்கும் உள்ளவர்கள். எதிர்மனுதாரர்கள் சட்டத்தை மதிப்பவர்கள் அல்ல. எனவே, தாவா மனு சொத்தைப் பொறுத்து எதிர்மனுதாரர்கள் மனுதாரர்களது அனுபவத்திற்கு எந்தவித இடையூறும் செய்யக்கூடாது என அவர்கள் பெயரில் ஒரு தற்காலிக உறுத்துக்கட்டளை பிறப்பிக்க வேண்டியது அவசியமாகும். இல்லாவிடில் மனுதாரர்களுக்கு பெருத்த கஷ்டமும் நஷ்டமும் ஏற்பட்டுவிடும். மனுதாரர்களுக்கு மேற்படி வழக்கில் முதல்நிலை வழக்கும் சமச்சீர் நிலையும் சாதகமாக உள்ளது. ஆகவே சமூகம் நீதிமன்றம் கிருபை செய்து மனு சொத்தை பொறுத்து மனுதாரர்கள் அமைதியான முறையில் சுவாதீனத்தில் இருந்து வருவதற்கு 1 முதல் 3 பிரதிவாதிகளோ அவரது ஆட்களோ மற்றும் முகவர்களோ எந்தவித இடையூறும் செய்யக்கூடாது என அவர்கள் பெயரில் இந்த தாவா முடியும் வரை ஒரு தற்காலிக உறுத்துக்கட்டளை உத்தரவும், கோரும் பரிகாரம் மிகவும் அவசரமாக இருப்பதால் இந்த மனு முடியும் வரை ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவு பிறப்பிக்க வேண்டியது அவசியமாயும் நியாயமாயும் இருக்கிறது.

3. எதிர்மனுதாரர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர் வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினால் தோன்றா தரப்பினராக கருதப்பட்டு ஒருதலைப்பட்ச மாக்கப்பட்டுள்ளார்கள்.

4. <u>தற்போது இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில்:</u>

இம்மனு அனுமதிக்கப்பட வேண்டியதா? இல்லையா என்பதே ஆகும்?

5. இந்த மனு விசாரணையின் போது சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை மற்றும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

<u>6. தீர்வு:-</u>

6.1. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

6.2. அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்கள்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டு எதிர் வழக்குரை தாக்கல் செய்ய வாய்தா போடப்பட்டுள்ளது. அசல் வழக்கில் இந்த வழக்கின் 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள், 1 முதல் 3 பிரதிவாதிகளாகவும், 4 முதுல் 6 பிரதிவாதிகளாக ஈரோடு மாவட்ட ஆட்சியர், ஈரோடு மாவட்ட வருவாய் ஆட்சியர், சத்தியமங்கலம் வருவாய் வட்டாட்சியர் ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர். அசல் வழக்கில் 1 முதல் 3 பிரதிவாதிகள் அழைப்பாணை பெற்ற பிறகும் ஆஜராகாத காரணத்தினால் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார்கள். 4 முதல் 6 பிரதிவாதிகள் எதிருரை தாக்கல் செய்ய வாய்தா போடப்பட்டுள்ளது.

6.3. மனுவின்படி வாதிகள் இருவரும் கணவன் மனைவி ஆவார்கள் மற்றும் தாவா காலைகளில் உள்ள பூமிகள் வாதிகள் கிரையம் பெற்ற காலைகளின் இடையிடையே ரீ.சர்வே எண்கள்.705/5, 705/6, 706/1, 706/6 708/4 மற்றும் 709/5 ஆகிய காலைகளில் உள்ள பூமிகள் அனாதீன பூமிகள் என்பதும் ஆகும். வழக்குடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள 06.04.2022 தேதியிட்ட முதல் வாதி பெயரிலுள்ள கிரைய ஆவண எண்.2520/22 மற்றும் 06.04.2022 தேதியிட்ட 2-ம் வாதி பெயரிலுள்ள கிரைய ஆவண எண்.2995/22 ஆகியவற்றை ஆராய்கையில் தாவா காலையிலுள்ள பூமிகளை வாதிகள் ஒரு மல்லிகா மற்றும் மோலி ஆகியோர்களிடமிருந்து கிரையம் பெற்றுள்ளனர் என்பது தெரிய வருகிறது.

6.4. வாதிகள் கிரையம் பெற்றுள்ள பூமிகளில் அமைந்துள்ள அனாதீன பூமிகளை வாதிகள் கிரையங்கள் பெற்ற பூமிகளின் முன்னாள் கிரையதாரர்களும் பாத்தியதாரர்களுமான கணேஷ், குருசாமி, லோகநாதன் ஆகியோர் கிரையம் பெற்ற பூமிகளை சுவாதீனம் அடையும்போது அனாதீன பூமிகளையும் அடைந்து அனுபவித்து வந்ததாகவும், மாமரங்கள் உட்பட பல மரங்கள் பயிரிட்டு விவசாயம் செய்து வந்ததாகவும், தண்ணீர் குழாய்கள் பதித்து அனுபவித்து வந்ததாகவும், அரசக்கு

செலுத்தவேண்டிய உரிய வரி வகையறாக்களை செலுத்தி வந்ததாகவும், ரீ.சர்வே எண்.705/5, 705/6-ல் உள்ள காலைகளின் நடுவே பண்ணை வீடு கட்டியும் மின் இணைப்பு பெற்றும் அனுபவம் செய்து வந்ததாகவும் அவர்கள் ஒரு ஜெயமணி என்பவருக்கு அவர்கள் அடைந்து அனுபவித்து வந்த பட்டா மற்றும் தாவா அனாதீன பூமிகள் அனைத்தையும் கிரையம் செய்து கொடுத்ததாகவும், அவர் அனுபவித்து வந்து அவரிடமிருந்து மல்லிகா மற்றும் மோலி ஆகியோர்கள் கிரையம் பெற்று பட்டா பூமிகயையும் அதனுடன் சேர்த்து தாவா அனாதீன பூமிகளையும் அடைந்து அனுபவித்து வந்தததாகவும், அவர்களிடமிருந்து வாதிகள் கிரையம் பெற்று அனுபவத்தில் இருந்து வருவதாகவும் குறிப்பிட்டு வாதிகள் தரப்பில் அவர்களின் முன்னாள் கிரையதாரர்களின் கிரைய பத்திரங்களும், கந்தாய இரசீதுகளும் வீட்டுவரி இரசீதுகளும் மற்றும் மின் கட்டண இரசீதுகளும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6.5. ஆனால் தாவா காலைகளில் உள்ள பூமிகளுடன் சேர்த்து தாவா அனாதீன பூமிகளையும் வாதியின் முன்னாள் கிரையதாரர்களும், வாதிகளும் அனுபவித்து வந்தார்கள் என்பதற்கு வாதிகள் தரப்பில் போதுமான சாட்சியங்களோ ஆவணங்களோ இல்லை. எனவே தற்போதைய நிலையில் உரிமை மூலம் மற்றும் அனுபவத்தை பொறுத்து அசல் வழக்கு விசாரணையில் இரு தரப்பு ஆவணங்களையும் சாட்சியங்களையும் வைத்து தான் தாவா காலைகளில் உள்ள பூமிகளுடன் தாவா அனாதீன பூமிகளையும் சேர்த்து வாதிகளும் முன்னாள் கிரையதாரர்களும், பாத்தியதாரர்களும், வாதிகளின் கிரையதாரர்களும் அனுபவித்து வந்தார்களா? அவர்களுக்கு அதில் முழு உரிமை உள்ளதா? என்பதை முடிவு செய்ய இயலும். எனவே தற்போதைய நிலையில் தீர்மானம் செய்ய இயலாது.

6.6. எனவே, மனு சங்கதிகளின் அடிப்படையில், அனுபவத்தைப் பொறுத்து உறுதியான ஆவணங்கள் எதையும், தாக்கல் செய்யாத நிலையில், அசல் வழக்கின் பரிகாரத்தை ஒத்த

இந்த இடைக்கால பரிகாரம் வழங்குவது அசல் வழக்கில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதால், முதல் தோற்ற வழக்கோ, சமச்சீர் நிலையோ, இழப்பீடோ இந்த மனுதாரர்களுக்கு சாதகமாக இல்லையென்று தீர்மானிக்கப்படுகிறது. இந்த மனுவை அனுமதிக்கும் பட்சத்தில் எதிர்மனுதாரர்கள் தரப்புக்கு பாதிப்பு ஏற்படும் நிலை உள்ளது.

7. முடிவாக, இந்த மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுதொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்துப் பார்த்து பிழைத்திருத்தங்கள் செய்யப்பட்டு 2024-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 06-ம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

N SHARMILA Digitally signed by N SHARMILA Date: 2024.10.24 12:38:01 +0530

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.

<u>மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு</u>
<u>சாட்சிய மற்றும் சான்றாவணங்கள்:-</u> -இல்லை-

N SHARMILA Digitally signed by N SHARMILA Date: 2024.10.24 12:38:16 +0530

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.